Vol. XXIII] October, 1923 [No. 4

Society for the . . .
Prevention of Cruelty .
to Animals, Madras .

ENGLISH & TAMIL

# TIT-BITS
OF
# ANIMAL LIFE

வர்த்தமான ஸாரம்.

*Copies can be had on application to the*
*Honorary Secretary, S.P.C.A., Vepery, Madras.*

Annual Subscription, Half a Rupee, payable in advance.



EDITED BY
Rai Saheb G. Venkataranga Rao, M.A.,
*Member of the S.P.C.A*
சென்னை: ஜீ. ஹி. ரி. சங்கத்தின் மெம்பராகிய
ராய் சாஹேப் ஜி. வெங்கடரங்க ராவ், எம்.ஏ. அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

PUBLISHED QUARTERLY.

## A QUARTERLY JOURNAL—Vol. XXIII.—Number 4.

### October, 1923-௵ அக்டோபர்௴

CONTENTS


| IN ENGLISH | PAGE |
|---|---|
| Insect Intelligence ... ... | ... 31 |
| Kindness to Animals ... ... | ... 33 |
| Love in the Lower Kingdom | ... ,, |
| Animals as Spies ... ... | ... 34 |
| Lives Saved by Dogs ... | ... 35 |
| Our Noble Savages... ... | ... ,, |


பொருளடக்கம்


| தமிழில் | பக்கம் |
|---|---|
| மகமதியர் ஆளுகையில் பசுவின்கொலை இல்லாமை ... ... ... ... | 35 |
| அஹிம்சா.— புத்தருடைய மேன்மையான கொள்கை ... ... ... ... | 37 |
| வியாசம் — "எல்லா ஜீவப்பிராணிகளும் தங்கள் குஞ்சுகளை அல்லது குட்டிகளை அருமையாக நேசித்து வருகின்றன ... | 38 |
| முக்கிய குறிப்பு ... ... ... | 40 |



# TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை

சம்புடம் XXIII.] OCTOBER, 1923-௵ அக்டோபர்௴ [இலக்கம் 4.


## Insect Intelligence

### REMARKABLE SAGACITY OF THE ANT

When we notice the wonderful habits of insects it is necessary to be extremely cautious how we judge their intelligence by their behaviour; because instinct has reached a greater degree of perfection among insects than in any other group of animals, writes Miss L. E. Cheeseman, Curator of the Insect House, Zoological Gardens, London.

For example, a butterfly will select a plant which is the food of her caterpillars, on which to deposit her eggs. Marvellous, we might say, that an insect which feeds on honey should have the intelligence to make this provision for a leaf-eating generation! But we know that this is merely inherited instinct; that it is the scent of the plant which excites the scent-organ of the butterfly, and hereby sets in motion a whole system of complex machinery resulting in the depositing of eggs. If the juice of the plant should be extracted, and some other plant soaked in it, the butterfly will just as readily lay her eggs on this plant although it is not the food of her caterpillars. For an insect acting on instinct will complete the accustomed series of mechanical impulses without perceiving that some important condition is lacking whereby the whole action is rendered futile.

### INSTINCT *vs.* INTELLIGENCE.

Experiments of this kind have made some scientists believe that all insects' actions may be purely mechanical; but even the experimentists themselves are forced to admit that in the higher orders of insects, and particularly among social insects, there are remarkable instances of behaviour which point to a higher standard of intelligence altogether.

Wild bees, wasps, and ants furnish very valuable evidence on this point, and especially the carnivorous ants. After all, in which group of insects should we more likely to find a higher grade of mentality than in a community of carnivorous creatures which live by their wits? If man himself had not taken to living in communities, and had not given up his vegetarian habits, might he not have remained an ape?

Instincts are sufficient for any creature so long as they meet all the exigencies of its daily life; the propagation of the species being the final end in view. But the outside work of an ant colony creates problems which cannot be solved by hereditary instinct, and it is among the outside workers of an ant colony that we find the most highly developed cerebral nerves—which take the place of brain in insects—and we further find evidence of memory, resourcefulness, ingenuity, perseverance, and the ability to profit by experience.

### INTRICATE ORGANIZATION.

Instinct can direct all the actions, complicated though they may be, which take place inside an ants' nest by which the eggs are fertilized, laid, and tended until they hatch; and the larvæ are fed, washed, defended, and given materials to form their cocoon, if they spin one; and the pupæ are cleaned and kept in the right temperature until the mature ant is ready to emerge, when the pupal skin is peeled off them and

their limbs are straightened out for them, and they are set on their legs, henceforth to take their place as a working member of the commonwealth.

Instinct can direct all these actions; but when we consider the activities of those ants which work outside the nest we discover the need of another class of intelligence. All day long wingless workers are hurrying up and down their high-roads bringing food for the colony. Economy of time and energy must be the foremost consideration if the strength of the nest is to be maintained. So we find that there are scouts to bring tidings of any substantial booty and lay a 'scent trail' to it which is obediently followed by other workers. How implicit is this obedience to their leaders may be tested by drawing the finger across it. The worker will instantly be thrown into confusion until the scouts or some of the master-minds have repaired the breach by running over the trail where the new strange scent had damaged it.

### Tunnelled Safety

Observations on army ants in Nicaragua by Belt show very clearly the wisdom and judgment of the ant leaders, and the unhesitating loyalty to their leadership of the other workers. The food of army ants consists mainly of live insects; and they travel in massed formation to hunt their prey and overcome by their vast numbers any small creatures unlucky enough to be in their path. One of these armies happened to be crossing a railway, and every time a train passed thousands of ants were crushed. But a little later when Belt observed them again there were no ants on the lines, but the whole army was marching through tunnels which they had made under the rails. He scraped away these tunnels, but the ants only waited long enough to excavate new ones; for the leaders had sensed danger, and not one ant would cross over the lines contrary to their guidance.

A similar instance was witnessed in Italy, where the observer who recorded the incident was watching streams of a small red species of ant which came into the house through the window. As the intruders were troublesome, a fly paper was stretched across the window-sill, and this was soon covered with hundreds of little ant corpses. The next morning there was no increase in the numbers of the dead, but, on the contrary, a line of living ants was crossing the sticky surface quite unconcernedly by a path which they had constructed of particles of soil, etc. Not only were they carrying out their original plans, but they were taking advantage of the flies and other insects that were caught on the paper and dragging them off for food!

In the Insect House at the Zoological Gardens observations have been made for some time past on a colony of wood ants, which are found in almost any wood in Britain where Scots firs are growing, the needles of which form the chief material of their nests. Two colonies of these ants were established, each surrounded by a lead trough of water three inches broad to prevent their escape. From time to time a dead mouse was given them as food, which was buried in a few days. It was always laid on the same piece of ground in the front part of the nest near the moat, but on one occasion while they were burying it it rolled into the water. As they could not recover the corpse it was removed, and another dead mouse laid on identically the same spot. But this time the ants dug on the side farthest from the water so that the mouse rolled away from it towards the nest. This was clearly no coincidence, but the leaders profited by the memory of their previous disaster.

### War of the Colonies

As one colony became overcrowded, a bridge was placed over the moat between the two nests, and they were allowed to fight and re-colonise the ground. The pupæ of the conquered nest were stolen by the stronger colony, and, wishing to ascertain where these were being placed, I had the conquerors disturbed. The whole colony was instantly in an uproar, and turned out in full force to attack the invisible enemy. But one soldier-ant went down to the bridge-head, and there he stood sentinel for nearly half an hour, challenging every ant that crossed, interrogating each with his antennæ before allowing them to proceed. His chosen position was astoundingly correct, for it was the only point by which an enemy could approach—except by air, in which

197927



case the ants on guard would have noticed a shadow.

Many more examples could be quoted of the remarkable sagacity of these tiny atoms of the animal world, a sagacity which is calculated to result in a maximum of successful ventures with a minimum of expenditure of energy.

## Kindness to Animals

### A LANTERN LECTURE

A Lantern Lecture was given in the Hall at the Headquarters of the Theosophical Society, Adyar, on Sept. 15, at 6-45 P.M. by Mr. N. C. Rangaswami Iyengar, Superintendent of the S.P.C.A., Madras. There was a good attendance of residents, students and visitors. Dr. Annie Besant had hoped to take the chair, but was called away on more urgent business, her place being taken by Mr. Schwarz, Hon. Treasurer of the Theosophical Society, who is also an enthusiastic member of the Madras S.P.C.A.

The opening part of Mr. Rangaswami Iyengar's speech was particularly striking, laying stress upon the ennobling and uplifting power of humaneness of mankind, and the need to develop those virtues connected with the 'Heart' side of man's nature, i.e., sympathy, compassion and chivalrous protection of the weak and helpless.

As one listened to the speaker, one was impressed first and foremost with his earnestness, sincerity and intense enthusiasm, qualities which must inevitably awaken in the minds of his audience an interest in the subject, and sympathy with his admirable work, and we feel sure that some were moved to take more active part in the work of animal protection in future.

Mr. Rangaswami Iyengar is very painstaking as to detail, which gave his address a wide appeal. After the opening part of his lecture, which dealt mainly with the ethical value of humaneness, he gave stories from the *Puranas*, Hindu mythology, Christian, Jain, Muhammadan and Buddhist scriptures, all of which went to prove how kindness and compassion are loved of God and rewarded by Him, and how cruelty inevitably leads to downfall and in a direction away from God, whose nature is Love. These stories were illustrated by lantern slides, the pictures quickly changing as the various phases of the story were related. Some who were not conversant with English were able to follow the story by the pictures alone.

The speaker then passed on to acquaint his audience with the various forms of cruelty which exist around us. Much of this part of the lecture was marred by the frequent bursts of laughter at the descriptions of 'Man as a bully and tormentor'. One simply fails to comprehend that quality in human nature, particularly in the young, which takes pleasure in the humiliation and distress of some victims of mean and cowardly treatment; so that one is led to doubt the efficacy of depicting scenes of the cowardly pranks played by ignorant boys on helpless creatures, unless the meanness and degradation of the act is really brought home to the audience. If the latter were the case, a feeling of indignation should be aroused at the cowardly act, instead of a desire to laugh, displaying a sense of superiority at the animal's distress. It is true the young people in the audience were the culprits here, and this proves to us more forcibly than anything else the need for humane education in Schools, Scout troops, etc.

Mr. Schwarz, in thanking the speaker, pointed out that the admirable work done by the Madras S.P.C.A. was not sufficiently recognized by the public, otherwise it would meet with a more generous support, its income being inadequate to cope with the ever-widening development and progress of the organization.

Mr. Rangaswami Iyengar met some of the Adyar residents in the afternoon at 5 p.m., who desire to form a group for Animal Protection. All were pleased at the accounts of the splendid work done by the S.P.C.A., as well as being shocked and horrified at the descriptions of some of the forms of cruelty, which would go on unchecked, but for the work of the S.P.C.A.

## Love in the Lower Kingdom

Henri Coupin, a French writer who has done much to popularise science, has been studying the love histories of birds and animals.

He assures us that among birds there

are few females that reign over the heart of the males during their entire lives. Only in the cockatoo and parrot families is such fidelity found, cases being recorded in which the mate has died of grief when death has taken away his wife. Coupin ought to have added the eagles, which are monogamous, and rarely mate a second time if one of the pair dies.

Among those he speaks of, the male and female are entirely equal, neither seeking to dominate the other. Among the rest of bird kind, however, the family life lasts only a season; they mate in spring, rear their little ones in summer, divorce in autumn, and mate the year following.

The dove is a monster of infidelity, says M. Coupin, and there are many families of birds in which the harem instinct is pronounced, the males of the pigeon and ostrich tribes being especially patriarchal.

During the period of courtship the males go through all the agonies of jealousy characteristic of the human group. Their displays of vanity and their especial graces are equally humanlike, but once they have mated equally perfect and indisputable is the law that abides in birdland.

This, however, is also the case among the larger monkeys which in family life display a very high type of conjugal attachment and consideration. Of all animals, says M. Coupin, they are most domesticated and tribally the best citizens.

Among the lions the marriage is also of a very perfect kind, although his lordship, the lion, very soon wearies of being faithful and so, indeed, does her leonine ladyship, and divorce is very common among them after a season or two of marital bliss. The lion is, however, the best of all husbands in attentiveness and willingness to provide for the wants of the lady and the little ones.

A lioness frequently has ten or twelve lions competing for her favours. The competition among the males naturally gives rise to the bloodiest battles, yet when the lioness has chosen her mate the rejected lions retire with a common accord.

## Animals as Spies

### ABILITY OF FOX

The use of animals as spies has been a military art practised in Japan from remote times. The animals so used were the dog, fox and rat, which were trained for the purpose.

Naturalists say that the fox can be trained even to imitate the human voice, and the power of the animal in this direction is very effective, especially when trained to utter low sounds. It is only common knowledge that dogs and cats can be trained to understand human speech. If you order a dog to approach you when he knows full well you intend to punish him, he again reveals to a wonderful degree an accurate knowledge of your mind. In order to win the confidence of animals and then train them, one has to be kind and gentle towards them. Animals are most susceptible to affection, and readily averse to the opposite, even beasts of prey.

The fox is reckoned among the most clever of the wild animals in Japan. When a military officer desired to ascertain certain geographical facts as to the situation of a camp or fortress held by the enemy, he found the dog or fox his most efficient spy.

In feudal times certain places were always guarded, and all travellers passing either way through these barriers were strictly examined, while other likely places had watchmen hidden, but the entire country could not be so covered. For this purpose the ubiquitous fox was utilised. Human spies guarded the pathways over the mountains and across the plains, but the fox guarded the wilds and other pathless regions. The fox is small and not easily seen; he knows every foot of the country he traverses. Always on the trail, the animal spy follows the human spy.

When the fox or the spy dog perceives or detects the presence of a human being in the course of his patrol, he utters a faint sound, which his master behind understands and notes. The animal utters various sounds, and these are signals for the master to follow up or retire, as the case may require. The animal is trained to vary the cry whether the enemy is approaching or retreating. When the master finds he has lost the trail and cannot find his way out of the forest or mountain, he imitates the cry of a fox, and gets a reply that guides him the way he desires to go. If he continues to cry or bark in a special way, the fox will come to him and lead him aright.

Rats, too, were used as spies by the army officers of feudal Japan. The spy carried his pet rat in his sleeve. On approaching the position to be espied upon, he let the animal go free. The rat was trained to pick up any bit of paper it could find and bring it back to its master. In this way much valuable information was obtained.



## Lives Saved by Dogs

### WONDERFUL ACTS OF SAGACITY

Remarkable examples of life-saving by dogs are recorded in the annual report of the National Canine Defence League. The bronze medal of the League has been awarded to:

'Benny' and 'Nellie,' whose barking led to the discovery of their mistress, lost on Dartmoor, and who was unconscious when found.

'Bell,' a retriever, who gave the alarm of fire while her master and his family were asleep.

'Fluff,' a Pomeranian, whose barking saved his master's life, his shop and house being burnt out.

'Tiger' who saved a boy of eight from drowning in the River Calder.

'Toss,' who saved his master, an Anglesey farmer, from being gored to death by a bull.

'Paddy,' who gave warning of fire at night by pawing his mistress's arm until he roused her.

'Glen,' a sheep-dog, who saved the life of his mistress when attacked by an angry cow, by leaping up and biting its nose and legs, thus causing the cow to run away.

'Lucky Prince,' who saved his master when caught in the quicksands of Llanelly. The dog was given a rope and went to his master, who had sunk shoulder deep, and was with great difficulty dragged to safety.

The report states:

'So far as we can judge there is an increasing sensitiveness to the sufferings of dogs, and a growing current of thought which is favourable to their interests.'

## Our Noble Savages

The continued efforts of British visitors to put an end to the pigeon-shooting at Monte Carlo have been successful. We are heartily glad that this is so. Yet the *Times*, which opened its columns to the campaign against blood-sports on the Riviera, will continue to publish, like other papers, frequent and voluminous record of the successes of 'sportsmen' in this country in getting live foxes and hares torn to pieces by hounds.

Similarly, the collection of hares in order to have them coursed to death for the benefit of spectators at Waterloo Cup and similar meetings is accepted as 'legitimate sport.' Yet this is even more contemptible than hunting, for the victim has been kept in the agony and terror of captivity, and is released with practically no chance of escape. Moreover, the spectators are not taking the slightest risk themselves, whereas straight-siding huntsmen do take their chance of a fall.

Of the two evils, hunting and shooting for pleasure, shooting is greater in extent, since its victims are far more numerous; but as regards intensity of cruelty, hunting is obviously more revolting. For, though some birds may escape from the guns to die slowly of their wounds, the majority are killed outright, whereas no hunted animal escapes without many minutes or even hours of exhaustion and terror, culminating in the final horror of being torn in fragments while still alive.

This cold-blooded organization of 'sport' with its carted stags and hares caught only to be coursed, is just as disgusting as the gathering of boxed-up pigeons for the gilded gunmen of Monte Carlo. Yet those who rave against this 'sport' abroad condone worse atrocities at home, and talk complacently about fox hunting as a 'grand old British sport' and one of the cherished pastimes of our ancestors.

They might recollect that our ancestors used also to enjoy public burnings and floggings and executions, cock fights and bear-baiting.—*Daily Herald.*

## மகமதியர் ஆளுகையில் பசுவின் கோலை இல்லாமை.

இந்தியாவிலிருந்த மகமதிய அரசர்கள் பசுக்களைக் கொல்லுவதில் அநுசரித்த விஷயங்களும், இவ்விஷயத்தில் இந்துக்களுக்குச் சிறிதும் மனஸ்தாபம் வராமல் மரியாதையுடன் நடந்துகொண்ட விஷயமும் இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் சாதாரணமாகத் தெரியவே தெரியாது.

197927

இவ்விஷயத்தில் மகமதியர்களுடைய முன்னோர்கள் உதாரமான மனதுடனும் பெருந்தன்மையுடனும் இருந்தார்களென்பதைச் சரித்திர சம்பந்தமாய் (Dr. Syed Mahmud, Ph. D.) டாக்டர் சையத் மகமுத் என்பவர் எழுதியிருக்கும் சிலவற்றை எழுதுகிறோம்.

மகமதியர்கள் இந்தியாவில் அரசுபுரிந்த ராஜ்யங்களில் இந்துக்களுடைய மதசம்பந்தமான விஷயத்தில் தெரிந்துகொண்ட உணர்ச்சியையும் அவர்களை எவ்வளவு ஆதரணையுடன் நடத்திவந்தார்களென்பதையும் எழுதுகிறோம்.

இந்துக்களை ஜயித்து அவர்களுடைய ராஜ்யத்தை மகமதியர்கள் ஆண்டுவரும்பொழுது இந்துக்களை தங்களுடைய அடிமைகளென்றுவது அல்லது தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றுவது நினையாமல் அவர்களைத் தங்கள் தோழர்களென்று நினைத்து தங்களுக்குச் சரிசமானமாய் நடத்திவந்தார்கள். மேலும் மகமதிய அரசர்கள் இந்துக்களுடைய மதநோக்கத்தை ஆதரித்து, அவர்களுக்கு தங்கள் ராஜ்யத்தில் ராஜ்யாதிகார பொறுப்பையும் கொடுத்து வந்தார்கள். தவிரவும் பசுமாடுகளைக் கொல்லுவதின் விஷயத்தில் இந்துக்களுடைய மனதைப் புண்படுத்த மகமதிய அரசர்கள் சிறிதும் இணங்கவில்லை. அவர்கள் இந்தியாவில் அரசுபுரிய ஆரம்பித்த காலமுதல் இந்துக்களுடைய உணர்ச்சியை நன்றுகத் தெரிந்துகொண்டார்கள்.

மகமதிய அரசாட்சியின் ஆரம்ப முதற்கொண்டே மாடுகளைக் கொல்பவர்களுக்கு வரி விதிக்கப்பட்டிருந்தது. (Feroz Shaw Tughlak) பெரோஸ் ஷா துக்லக் காலத்தில் மாடுகளைக் கொல்பவர்கள் இந்த வரியை நீக்கவேண்டுமென்று அவருக்கு ஒரு மனு கொடுத்தார்கள். அவ்வரசர் அந்த வரியைத் தள்ளிவிட்டார். இவ்வித வரி மகமதியர்கள் அரசுபுரிய ஆரம்பித்தது முதல் பெரோஸ் ஷா துக்லக் காலம் வரையில் அதாவது சுமார் 200 வருஷகால மிருந்தது. அக்காலத்திலிருந்த மகமதிய அரசர்கள் பசுக்களைக் கொல்லுவதைத் தடுக்கும்படி கட்டளையிடுவதற்குப் பதிலாக இவ்வித வரியை விதித்திருந்தார்களாம். இதற்கு ஜஸரி (Jazari) என்று பெயர். மகமத் ஷா துக்லக் காலத்தில் (Mohamad Shah Tughlak) கோமாமிசம் அரண்மனையிலுள்ளோர் புசித்ததேயில்லையாம். அரண்மனையில் சாப்பாட்டின் அட்டவணையில் கோமாமிசம்தென்படவேயில்லை. மகமது கியாஸ் உத் தீன் துக்லக் (Mohamad Ghias-ud-Din Tughlak) காலத்தில் கூர்ஜரத்திற்கு கவர்னராயிருந்த பார்ஹத்–உல்–முல்க் (Farhat-ul-mulk) என்பவர் இந்துக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். பசுக்களைக் கொல்லும்படி உத்தரவு அளிக்கவேயில்லை.

பின்பு சுல்டான் நாஸர்–உத்–தீன் குஸ்ரு (Sultan Nasir-ud-Din Khushro) தமது இராஜ்யத்தை ஆளுகையில் ஒருவரும் பசுக்களைக் கொல்லவே கூடாதென கட்டளையிட்டதுமன்றி அப்படி செய்வதை அடியோடே நிறுத்திவிட்டார். பிரோஸ் ஷா துக்லக் என்ற அரசரால் நீக்கப்பட்ட ஜஸரி என்ற வரி அவருக்குப்பின் மறுபடியும் விதிக்கப்பட்டதாம். ஏனெனில் அக்பர் சக்கரவர்த்தி இந்த வரியை நீக்கிவிட்டதாக சரித்திர புஸ்தகங்களில் காணப்படுகிறது. அக்பர் சக்கரவர்த்தி தமது ஆளுகையில் பசுக்களைக் கொல்லவே கூடாதென கண்டிப்பான உத்திரவிட்டு, அக் குரூர செய்கையை நிறுத்திவிட்டார். ஆனது பற்றி அந்த வரி அனாவசியமென தென்பட்டதாம். அதனால் அந்த வரி நிறுத்தப்பட்டதென்று சொல்லலாம்.

ஒரு ஆங்கிலேய யாத்திரிகர் பதினேழாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தார். அவர் இந்துக்கள் பசுக்களிடத்தில் அன்பும், ஆதரணையும் வைத்திருந்ததைக் கண்டு, "பசுவைக் கொல்வது ஒரு மனிதனைக் கொலை செய்தால் எப்படி பாதகமான குற்றமாகுமோ அவ்விதம்தான் என்று எண்ணியிருக்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார். மகமதிய அரசர்கள் இந்துக்களுடைய எண்ணத்தைக் கெடுக்க முயற்சி செய்யவுமில்லை. அவர்கள் எங்கு பார்த்தாலும் பசுவைக் கொல்லக்கூடாதென்று பகிரங்கமாகப் பிரசங்கம் செய்து வந்ததையும் மகமதியர்கள் தடுக்கவுமில்லையாம். இவைகளால் மகமதிய அரசர்கள் இந்துக்களுடைய எண்ணத்திற்கிசைந்து வந்தார்களென்று தெரிகின்றதல்லவா?

மொகலாயர்கள் இந்தியாவில் தங்கள் அரசாட்சியை ஸ்தாபித்தபொழுது பாபர் (Babar) சிம்மாசனத்திற்கு வந்தார். இவர்



தம் ஆளுகையில் இந்துக்களுடைய எண்ணங்களைச் செவ்வனே தெரிந்து கொண்டார். தம்முடைய குமாரனாகிய ஹுமாயூனுக்கு (Humayun) ஒருகடிதம் எழுதினார். அதில் இந்துக்களுடைய மதசம்பந்தமான நம்பிக்கையைப்பற்றி எழுதியிருந்தார். மேலும் பசுக்களைக் கொல்லுவதைத் தடுக்க நன்மையைச் செய்யும்படி தூண்டினாராம். இந்த புராதனபத்திரம் போபால் (Bhopal) சமஸ்தானத்திலுள்ள புஸ்தகசாலையி லிருக்கிறதாம்.

பின்பு அக்பர் சக்கரவர்த்தியாக வந்த காலத்தில் அவரும் தமது அகண்ட ராஜ்ய முழுவதும் பசுக்களைக் கொல்லுவதை அடியோடே நிறுத்தும்படி கட்டளையிட்டாராம். இதைப்பற்றிய முழுவிவரம் ஐனி அக்பரி (Ain-i-Akbari) என்ற புஸ்தகத்தில் காணப்படுகிறது.

இவருக்குப்பின் வந்தவர்களும் இவர் ஏற்படுத்திய சட்டத்தை யநுசரித்து வந்தார்கள். ஜஹாங்கீர் (Jahangir) இதைக் கட்டாயமாய் யாவரும் அநுசரித்து வரவேண்டுமென்று வற்புறுத்தியதுமன்றி அக்பர் பிறந்த தினமாகிய ஞாயிற்றுக்கிழமையிலும், சிம்மாசனம் ஏறின தினமாகிய வியாழக்கிழமையிலும் ஒருவரும் எந்த மிருகத்தையும் கொல்லக் கூடாதென்றும், வேட்டைக்குப்போய் மிருகங்களைக் கொல்லக்கூடாதென்றும் கண்டிப்பாய் கட்டளையிட்டாராம்.

மேற்கூறிய வண்ணம் மகமதிய அரசர்கள் இந்துக்களுடைய எண்ணத்திற்கு விரோதமின்றி இருந்ததாகவும், அவர்களோடு மிகவும் அன்புடன் சிநேகம் பாராட்டி வந்ததாகவும் சரித்திர மூலமாகத் தெரிகிறது

## அஹிம்சா.—புத்தருடைய மேன்மையான கோள்கை.

வெகுகாலத்திற்கு முன் ஒரு கீர்த்திவாய்ந்த அரசனிருந்தான். அவனுக்குப் புத்திரனில்லை. அதற்காக யாகம்செய்ய ஏற்பாடு செய்தான். வேலைக்காரர்களுக்குப் பணம் கொடுத்து ஆயிரம் ஆடுகளை வாங்கிக்கொண்டு வரும்படி உத்திரவிட்டான். அவ்விதமே வேலைக்காரர்கள் ஆயிரம் ஆடுகளை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தார்கள். அத்தெருவில் புத்தர் போய்க்கொண்டிருந்தார். அவர் இத்தனை ஆடுகளையும் பார்த்து, "இவைகளை எவ்விடத்திற்கு எதற்காக கொண்டுபோகிறீர்கள்" என்று அவர்களைக் கேட்டார்.

அவர்கள் "ஐயா! எங்கள் அரசன் யாகத்திற்காக இவைகளை விலைக்கு வாங்கிக்கொண்டு வரும்படி கட்டளை யிட்டிருக்கிறார்" என்று பதிலளித்தார்கள்.

உடனே புத்தர் தமது பரோபகார சிந்தையுடன் அவ்வாடுகளைப் பின்தொடர்ந்து சென்றார். யாகம் செய்யப்போகுமிடத்திற்கு வந்தவுடன் புத்தர் வேலைக்காரர்களி லொருவனைக் கூப்பிட்டு, "அரசனிடத்திற்குச் சென்று ஒரு சந்நியாசி வந்திருப்பதாகச் சொல்" என்றார்.

அவ்வேலைக்காரன் அவ்விதமே அவ்வரசனிடம் சென்று "மகாராஜாவே! இங்கு ஒரு சந்நியாசி வந்திருக்கிறார். தங்களுக்குத் தெரிவித்து வரும்படி என்னை அனுப்பினார்" என்றான்.

உடனே, அவ்வரசன் இதைக்கேட்டு எழுந்து ஓடிவந்து சந்நியாசிக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான்.

புத்தர் "ஓ அரசனே! எதற்காக இத்தனை ஆடுகளை விலைக்கு வாங்கிக்கொண்டு வரச் சொன்னீர்கள்" என்று கேட்டார்.

"ஓ மகானுபாவா! எனக்குப்புத்திரனில்லை. புத்திரன் உண்டாவதற்காக யாகம் செய்யப் போகிறேன். அதற்காக ஆடுகளை வரவழைத்தேன்" என்று அரசன் மறுமொழி பகர்ந்தான்.

புத்தர் "ராஜாவே! அதற்காகவா இத்தனை ஆடுகளைப் பலிகொடுக்க வரவழைத்தீர். அது அநியாயம், குரூரமானது" என்று சொன்னார்.

அரசனுக்குக் கோபமுண்டாய் விட்டது. "தாங்கள் சந்நியாசியா? தங்களுக்கு சாஸ்திரங்கள் தெரியுமா" என்று கடுங்கோபத்துடன் கேட்டான்.

புத்தர் "ராஜனே! எனக்கு சாஸ்திரங்களும் வேதங்களும் நன்றாகத் தெரியும். ஆனால் ஜீவப்பிராணிகளைப் பலிகொடுப்பதை வெறுக்கிறேன்" என்று பதிலளித்தார்.

அந்த அரசன் புத்தர் சொன்னவைகளைக் கேட்கவில்லை. இவ்விதம் அரசன் சிறிதும் இணங்காமையால் புத்தர் யாகசாலையிலுள்ள ஆடுகளைக் கட்டிக் கொல்லும்படியான யூபஸ்தம்பத்தினிடத்திற்குச் சென்று "ராஜனே அந்த ஆயிரம் ஆடுகளைப் பலிகொடுப்பதற்குப் பதிலாக என்னை பலிகொடுங்கள்" என்று கம்பீரமாய்ச் சொன்னார்.

அவ்வரசன் ஒரு சந்நியாசி ஆடுகளுக்காகத் தம் உயிரை விட்டுவிட நிச்சயித்திருப்பதைக் கண்டு திகைத்தான். இவனது மனதில் நல்ல எண்ணம் உண்டாயிற்று. உடனே அந்த ஆடுகளையெல்லாம் சுயேச்சையாய் காட்டில் வசிக்கும்படி விட்டுவிட உத்திரவு செய்தான். மேலும் இனி ஒரு ஜீவப்பிராணியையும் கொல்லுவதில்லை என சபதமும் அரசன் செய்தான்.

## வியாசம்.

"எல்லா ஜீவப்பிராணிகளும் தங்கள் குஞ்சுகளை அல்லது குட்டிகளை அருமையாக நேசித்து வருகின்றன"

(முன் நம்பரின் தொடர்ச்சி.)

சில மனிதர்கள் சிறு குருவிகளைப் பிடித்து வியாபாரம் பண்ணுகிறதை, பாடசாலையில் கற்கும் மாணாக்கர்கள் வாங்கி அதின் இறகுகளை வெட்டி, அதற்குச் சரியான ஆகாரம் கொடுக்காமல், அதை பெட்டியினுள்ளாவது, கூண்டினுள்ளாவது போட்டு அடைத்து, அதன் சந்தோஷமான ஜீவியத்தை மாற்றிவிடுகிறார்கள். ஒருநாள் ஒரு துரைமகன் தன் தகப்பனைக் காடை வாங்கிக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அத்துரை அவன் வேண்டுகோளுக்கிணங்கி அவனுக்கு ஒரு காடை கூண்டோடே வாங்கிக்கொடுத்தார். அவன் அதை மிகப் பிரியமாக வைத்துவந்தான். அப்போது அத்துரை அவனை தினம் அழைத்து, உன்னை இவ்விதமாக தாயையும், தகப்பனையும் விட்டுப் பிரித்து ஒரு தூரதேசத்தில் விட்டுவிட்டால் உனக்கு எவ்விதமாக இருக்குமோ? அவ்விதமாகத்தான் இப்பொழுது இப்பறவைக்கும் இருக்கும் என்று போதித்து வந்தார். கடைசியாக அவன் தன் தகப்பன் சொல்லும் உபதேசத்தைக் கவனித்து அவனே அதை உணர்ந்து அதை அவிழ்த்து பறக்கவிட்டான். அவன் பெரியவனாகுங் காலத்தில் எவ்வளவு காருண்ய சிந்தையுள்ளவனாயிருப்பானென்பதை நாம் ஒருவாறு கிரகித்துக்கொள்ளலாம்.

இவ்விதமாகவே நாம் அவர்களுக்கு இளம் பிராயத்திலே நற்போதனை போதித்து, அவர்கள் ஒரு பிராணியையாவது சித்திரவதை செய்யாமல் அவைகளிடத்தில் காருண்ய சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி செய்தால் அவர்கள் தாங்கள் மாத்திரமல்ல இன்னும் அவர்களுடைய இனஜனபந்துக்களிடத்தும், சிநேகிதரிடத்தும் போதித்து, அவர்களையும் நல்வழிக்கு ஆளாக்குவார்கள். அப்படிச் செய்வதற்காகவே, சங்கத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள், வருஷத்திற்கு ஒரு முறை எல்லா மாணாக்கரையும் இதைப்பற்றி ஒரு வியாசம் எழுதச் சொல்லி வருகிறார்கள். மேலும் அவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு எல்லாவற்றைவிட நன்றாய் எழுதுபவர்களுக்குப் பரிசளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி இவ்வருஷம் "எல்லாச் ஜீவப்பிராணிகளும் தங்கள் குட்டியை அல்லது குஞ்சுகளை நேசித்து அன்போடு பராமரித்து வருகிறது" என்பதின்பேரில் ஒரு வியாசம் எழுதும்படியாக எல்லா மாணாக்கரையும் விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள்.

இப்போது ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு மிருகமும் தன்தன் குஞ்சுகளையும் குட்டிகளையும் நேசித்து அன்போடு பராமரித்து வருகிறது. ஒரு பழமொழி உண்டு அதாவது "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்றால் "காக்கைக்குஞ்சு கறுத்த நிறம். அது கண்ணுக்கு அழகாயிருக்காது. ஆனால் ஒரு காக்கைக்குஞ்சைப்போல் தங்கத்தினால் செய்துவைத்தால் எவ்வளவு அழகாயிருக்குமோ? அதேமாதிரிதான் காக்கைக்கு அதன் குஞ்சு அழகாயும் அன்பாகவும் இருக்கும். ஆனால் சில மிருகமும் பறவையும் தங்கள் குட்டிகளையும் குஞ்சுகளையும் கவனிக்கிறதேயில்லை. உதாரணமாக, தீக்கோழி, முதலை, ஆமை, இன்னும் சில தங்கள் முட்டையை நிலத்திலே இட்டு மணலினால் மூடிப்போகும், பின் அதற்கு என்ன நேரிட்டதென்று பார்க்க அவ்விடத்திற்கே வராது. அம்முட்டைகள் சூரிய வெப்பத்தினாலே பொறித்து, குஞ்சுகள் வெளிப்பட்டு தானாகவே இரை தேடித்தின்று வளரும்.

சில சிறு பட்சிகள் தங்கள் குஞ்சுகளை காக்கும் பொருட்டு, தங்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமல் பாம்புகளோடுகூட போர்புரிந்து அவைகளையும் ஜெயித்திருக்கிறது. ஒரு மாதத்தில் ஒரு கருங்குருவி கூடு கட்டி அதில் சில குஞ்சுகள் வைத்திருந்தன. அதைக் கவனித்திருந்த ஒரு நாகப்பாம்பானது, அந்தக் குருவி இறை தேடப்போ



யிருக்கும் சமயம் பார்த்து தினம் ஒரு குருவியைத் தின்று வந்தது. தினம் ஒரு குஞ்சைக் காணாது குருவியானது மிக வருந்தியிருந்தது. மறுநாள் அப்பாம்பு கூட்டினருகே சென்றபோது, இரை தேடப்போயிருந்த குருவி திரும்பி வந்தது. வந்து பார்த்ததும் அது மிகக் கோபத்துடனே அப்பாம்பை கொத்தியது. வேதனை தாங்காது அப்பாம்பு விரைந்து ஓட அக்குருவி பின்னும் அதைத் தொடர்ந்துபோய் மேலும் மேலும் அதைக் கொத்தி கடைசியாக அப்பாம்பைக் கொன்றுவிட்டது. தன் குஞ்சுகளைக் காக்கும்படியாக அது எவ்வளவு சாமர்த்தியத்துடனே அப்பாம்போடு அது சண்டை செய்திருக்கவேண்டும். மனமுண்டானால் இடமுண்டு என்று அது தான் கருதிய காரியத்தைச் செய்தேமுடித்தது.

இன்னொரு சிறு சரித்திரத்தில் ஹைரன் என்ற ஒரு சிறு குருவி தன் குஞ்சுகளின் உயிருக்காக தன் உயிரையே கொடுத்ததாக விளங்குகிறது. அதாவது ஒரு வீடு நெருப்புப்பற்றி எரிந்துவிட்டது. எல்லாம் எரிந்த பிறகு அவ்வீட்டையுடைய மனிதன் ஏதாகிலும் சாமான் அகப்படுமா என்று பார்த்துக் கொண்டிருந்தான். அச்சமயத்திலே அவன் திடீரென்று உயரப்பார்த்தபோது கூரையின் ஒரு மூலையில் ஒரு குருவி செட்டைகளை விரித்து உட்கார்ந்திருந்த மாதிரியே அக்கினிக்கு இரையாகியிருந்தது. அதைக் கண்ணுற்ற அம்மனிதன் ஒரு குச்சியினால் அப்பக்ஷியைத்தள்ள இரு சிறு குஞ்சுகள் பறந்து ஓடிற்று. இச்சிறுக் கதையிலிருந்து நாம் அறிகிற தென்னவெனில் அச்சிறு குருவியானது தன்னுயிரைச் சற்றேனும் எண்ணாமல் தன் குஞ்சுகளைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடு தன் இறக்கைகளினாலே அவைகளை மூடிக்கொண்டிருக்கும்போது எரிகிற அக்கினிக்கு இரையாயிற்று. ஆனால் அதனடியிலமைந்திருந்த இரு சிறு குஞ்சுகளானது யாதொரு சேதமின்றி சுகமாய்க் காக்கப்பட்டன. இதினால் அக்குருவி தன் குஞ்சுகளை எவ்வளவுதூரம் நேசித்திருக்க வேண்டுமென்று தெரியவருகிறது.

ஒருநாள் ஒரு வேடன் வேட்டையாடப் போகும்போது ஒரு சிறு குருவி அவனை சந்தித்து அவனைப் பார்த்து ஐயா எங்கே போகிறீர் என்று கேட்க அவன் வேட்டைக்குப் போகிறேன் என்று விடை பகர்ந்தான். அப்போது அந்தக் குருவி ஐயா! அடியேன் ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன் அதாவது தாங்கள் வேட்டையாடும்போது என் குஞ்சை தயைசெய்து கொல்லவேண்டாம் என்றது. அதற்கு அவ்வேடன் உன் குஞ்சைத்தான் முதலில் கொல்லுவேன் என்று முரட்டுத்தனமாய் விடைபகர்ந்தான். உடனே அந்தக் குருவியானது கண்ணீருடனே ஐயா என் குஞ்சைமாத்திரம் கொல்லவேண்டாம்; ஆனால் என்னைக் கொல்லலாம் என்று மிக வாய்க்கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. உடனே அவ்வேடன் மனதுருகி உன்னையும் கொல்லேன் உன் குஞ்சையும் கொல்லேன் என்று சொல்லி தன் வழியே சென்றான். அக்குருவியும் களிப்புடனே தன் கூண்டை நோக்கிச் சென்றது. இவைகளிலிருந்து குருவிகளுக்கு தங்கள் குஞ்சுகள் மேலுள்ள அன்பு விளங்குகிறது.

காகங்கள் தங்கள் குஞ்சுகளை மிக அன்பாக நடத்திவருகிறது. அவைகள் தங்கள் குஞ்சுகளை மாத்திரம் அன்பாய் நடத்துகிறதல்ல. எல்லாக் காகங்களும் அன்பாகவும் ஐக்கியமாகவும் இருக்கின்றன. அவைகளுக்குள் எந்த காகத்திற்காவது எந்தவிதமான மோசம் நேரிட்டாலும் அந்தப் பக்ஷிக்காக எல்லாப் பறவையும் ஒன்றுகூடி அதற்காக விசனப்படும். காகங்கள் முதலில் முட்டையிட்டு அடைகாத்து பின் குஞ்சு பொரிக்கும். அக்குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டு கொஞ்சநாள் வரையில் அவைகளால் பறக்கமுடியாது. ஆகையால் தாய்க்காகமானது அவைகளுக்கு வெளியிலிருந்து இரை தேடிக்கொண்டுபோய் அவைகளின் வாயில் ஊட்டும். சிலகாலம் சென்றபின் அவைகளை வெளியே கொண்டுவந்து அவைகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுக்கும். அது பறக்கக் கற்றபிறகும் சிலநாளைக்கு அவைகளுக்கு ஆகாரம் ஊட்டியே வளர்க்கும். பின் அவைகள் தாங்களே இரைசம்பாதித்துக் கொள்ளும் என்று கண்டவுடனே அவைகளை விரட்டிவிட்டு திரும்பவும் முட்டையிடும்.

அந்த காகங்கள் குஞ்சுகள் வைத்திருக்கும்போது குரங்கையாவது வேறு எந்த சத்துருக்களையாவது கிட்ட அணுகவிடாது. நாங்கள் இருக்கும் வீட்டிற்கு முன்னாலே ஒரு தென்னமரம் இருக்கிறது. அத்தென்ன மாத்

தில் ஒருகாகம் சில குஞ்சுகளை வைத்திருக்கின்றது. அவைகளுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஆகாரம் கொண்டுபோய் கொடுக்கும். சில சமயங்களில் அத்தென்னமரத்திலிருக்கும் பூவைத்தின்னுவதற்காக ஓர் குரங்கு வரும். அது வரும்போதெல்லாம் எல்லாக் காகங்களும் ஒன்றுகூடி அதைக் கொத்தி விரட்டிவிடும். ஏனென்றால் குரங்கு காகக் குஞ்சுகளைக் கண்டால் கழுத்தை நசுக்கிக் கொன்றுவிடும். ஆகையால்தான் அது அப்படிச் செய்கிறது.

இன்னும் சில பறவைகள் தங்கள் குஞ்சுகளை செட்டைகளின் கீழே பாதுகாக்கும். அஃதெப்பட்சியென்றால் கோழி. சரியான கோழி ஒரு தடவையில் இருபது அல்லது இருபத்தைந்து முட்டையிடும்; பின்பு அவைகளை அவயங்காக்கும். குஞ்சுகளெல்லாம் வெளியேவந்தவுடனே பெட்டையானது மிக பெருமையுடனே அவைகளை அழைத்துப் புல்லுள்ள இடங்களுக்கு அவைகளைக் கொண்டுபோய் அங்குள்ள பூச்சி புழுக்கள் முதலியவற்றைக் காண்பித்து அவைகளைத் தின்னச்செய்யும். அவ்விதமாக அவைகள் மேய்ந்துகொண்டிருக்கும் சமயத்தில் கழுகு முதலியவற்றைக் கண்டால் ஒருவிதமாக சத்தமிடும். அச்சத்தத்தைக் கேட்டவுடனே எல்லாக் குஞ்சுகளும் கோழியின் செட்டையின் கீழே தஞ்சம் புகுந்துகொள்ளும். எவ்விதமான மோசம் நேரிட்டாலும் அவைகள் தங்கள் தாயின்செட்டையின் கீழேதான் தங்கும். அவைகள் கொஞ்சம் பெரியதாகி தாங்களே தங்களுக்கு இரைதேடிக் கொள்ளும் என்றும் தங்களைத் தங்கள் சத்துருக்களுக்கு விலக்கிக்கொள்ளும் என்று கண்டால் அவைகளைத் தள்ளிவிட்டு திரும்பவும் முட்டையிடும். அக்குஞ்சுகளெல்லாம் சின்னதாக இருக்கும்போது கண்ணுக்கு வெகு அழகாயிருக்கும். அச்சமயத்தில் சிறுவர்கள் அதைக் கையில்பற்ற ஆசைப்படுவார்கள். அவர்கள் அக்குஞ்சுகளைப் போய்ப் பிடித்தால் கோபத்துடனே அது நம்மைக் கொத்த வரும். அதைப் பிடித்துவிட்டால் சில சமயங்களில் கொத்தியேவிடும். ஆகையால் அக்குஞ்சுகளை நாம் தொடக்கூடாது.

கிறிஸ்தவ வேதபுஸ்தகத்தில் கோழியைப்பற்றி ஒரு வசனமிருக்கிறது. அவ்வசனம் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து கர்த்தரைப் பற்றியது. அதென்னவென்றால் "கோழி தன் குஞ்சுகளை செட்டையின் நிழலிலே காக்கிறதுபோலக் கர்த்தர் தம் பிள்ளைகளையும் காக்கிறார்," இவ்வாக்கியத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிற தென்னவென்றால், கோழியினுடைய அன்பை கடவுளினுடைய அன்போடு ஒத்துப் பேசியிருக்கிறதினால் கோழியினுடைய அன்பு எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும் என்று நாமே ஒருவாறு சிந்தித்துக்கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

## முக்கிய குறிப்பு.

அடையாரிலுள்ள தியசாபிகல் சொஸைட்டியிலுள்ள மண்டபத்தில் எஸ்.பி.சி. யேயின் சூப்ரண்டென்டென்டாகிய ஸ்ரீமான் என். சி. ரங்கசுவாமி ஐயங்காரவர்கள் (Magic Lantern) மின்னுக பூதக்கண்ணாடியின் மூலமாக ஒரு சிறந்த உபந்நியாசம் செப்டம்பர் 15உ செய்தார். அப்பொழுது அநேக கனவான்களும், மாணவர்களும் வந்திருந்தார்கள். அச்சங்கத்திற்கு கௌரவ பொக்கிஷதாராகிய (Mr Schwarz) மிஸ்டர் ஸ்க்வார்ஸ் என்பவர் சபைத்தலைமை வகித்தார். ஸ்ரீமான் ரங்கசுவாமி ஐயங்காரவர்கள் புராணங்களிலிருந்தும், இதிகாசங்களிலிருந்தும், கிறிஸ்துவவேதத்திலிருந்தும், ஜைனவேதத்திலிருந்தும், மகமதியகோரானிலிருந்தும், பௌத்த மதத்திலிருந்தும் பூதக்கண்ணாடியின் மூலமாக பல அருமையான கதைகளைச் சித்திரப்படங்களுடன் காட்டி ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்தார். இங்கிலீஷ் தெரியாதவர்கள் கூட அப்படங்களைக் கண்டு கதைகளைத் தெரிந்துகொண்டார்கள். ஸ்ரீமான் ரங்கசுவாமி ஐயங்காரவர்கள் அநேக பாடசாலைகளில் பற்பல விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்துவருகிறார். இவரால் அநேக துஷ்டப்பிள்ளைகள் குரூரமாய் ஜீவ ஜந்துக்களை வதைப்பதானது நின்று வருகின்றதென்று சொல்லலாம். இவரை மற்றவர்களும் பின்பற்றுவார்களாக.

PRINTED BY GEORGE KENNETH AT THE DIOCESAN PRESS, POST BOX 4[illegible]5, MADRAS—B.2981.

197927

# ANNOUNCEMENT

**The Madras S.P.C.A. Prize Essay Competition for 1923.**

The subjects for this year's Prize Essay Competition are—

(1) For College Students **"Great men and their animal friends."**

(2) For High School Students, **"What we owe to the horse and how we should treat him."**

One gold medal will be awarded for the best English Essay written by a student (boy or girl) of any College in the Presidency (including Mysore) on the subject prescribed above for College Students; and one gold medal and one silver medal for the best English and the best Vernacular Essay respectively by a student (boy or girl) of any school in the Presidency (including Mysore) on the subject prescribed above for School Students. The essays ought to be sent so as to reach the Honorary Secretary on or before the 1st February 1924.

## TO A RED-BREAST.

Little bird, with bosom red,
Welcome to my humble shed!
Courtly domes of high degree
Have no room for thee and me;
Pride and pleasure's fickle throng
Nothing mind an idle song.
Daily near my table steal,
While I pick my scanty meal.
Doubt not, little though there be,
But I'll cast a crumb to thee;
Well rewarded, if I spy
Pleasure in thy glancing eye:
See thee, when thou'st eat thy fill,
Plume thy breast, and wipe thy bill.

JOHN LANGHORNE.

# Convictions for the first nine months of 1923

This return is published to inform the public of the nature and extent of acts of cruelty to animals discovered by the Society in the City of Madras.

The following **CONVICTIONS** for cruelty to animals were obtained in Madras during the first half of 1923 by the Society's agency:—

| | | |
|---|---|---|
| 1. | Working Horses in an unfit state ... ... ... ... | 47 |
| 2. | Do. Ponies do. ... ... ... ... | 338 |
| 3. | Do. Bullocks do. ... ... ... ... | 1,307 |
| 4. | Do. Buffaloes do ... ... ... ... | 3 |
| 5. | Do. Mules do. ... ... ... ... | ... |
| 6. | Cows ill-treated ... ... ... ... ... ... | 1 |
| 7. | Calves do. ... ... ... ... ... ... | 33 |
| 8. | Fowls do. ... ... ... ... ... ... | ... |
| 9. | Donkeys do. ... ... ... ... ... ... | 1 |
| 10. | Goading Bulls ... ... ... ... ... ... | ... |
| 11. | Overloading ... ... ... ... ... ... | ... |
| 12. | Owners causing cruelty ... ... ... ... | 19 |
| | Total ... | 1,749 |

## 1923-௵த்தில் முதல் ஆறு மாதங்களில் ஜீவ ஹிம்சைக்காகச் செய்த தண்டனைகளின் பட்டி.

அடியில் குறித்த ஜீவ ஹிம்சையான குற்றங்கள் 1923-௵த்தில் முதல் ஆறு மாதங்களில் இந்தச் சங்கத்தாரால் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. | உழைக்கச் சக்தியில்லாமல் நோயாளியாயிருந்த குதிரைகளை வருத்தி வேலை வாங்கினதற்காகத் தண்டித்த குற்றம் .... .... .... | 47 |
| 2. | ,, குதிரைமட்டங்களை ,, .... | 338 |
| 3. | ,, எருதுகளை ,, .... | 1,307 |
| 4. | ,, எருமைக் கடாக்களை ,, .... | 3 |
| 5. | ,, கோவேறு கழுதையை ,, .... | .... |
| 6. | பசுக்களைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... .... | 1 |
| 7. | கன்றுக் குட்டிகளைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... | 33 |
| 8. | கோழிகளை ,, .... .... .... .... | .... |
| 9. | கழுதைகளை ,, .... .... .... .... | 1 |
| 10. | எருதுகளை தாற்றுக்கோலால் தூண்டினது .... .... .... | .... |
| 11. | அதிக பாரத்தை ஏற்றியது .... .... .... .... | .... |
| 12 | சொந்தக்காரர்களே செய்த மேற்குறித்த குற்றங்கள் .... .... | 19 |
| | மொத்தம் .... | 1,749 |

**இந்தச் சங்கத்தின் காரியங்கள் அவரவர்கள் இஷ்டப்பட்டுக் கொடுக்கும் உபகாரப் பொருளாலேயே நடத்தப்படுகின்றன.**

**The Society is supported only by Voluntary Contributions.**